## கிறிஸ்டியன் ஃபெடரேஷன் ஆப் மலேசியா
## (பெர்செத்துவான் கிறிஸ்தியன் மலேசியா)

*26 Jalan Universiti, 46200 Petaling Jaya, Selangor Darul Ehsan, Malaysia*
***Telephone / Fax : + 60 3 7957 1457***
***Email:** cfmsia@yahoo.co.uk*


9 அக்டோபர் 2014

# வேதாகமத்தை எரிக்க வேண்டுமென சொன்ன இப்ராஹிம் அலி மீது வழக்கு இல்லை எனக்கூறிய அமைச்சர் மீது கிறிஸ்தவர்கள் கொதிப்பு

நேற்று நாடாளுமன்றத்தில் வேதாகமத்தை எரிக்க வேண்டுமென சொன்ன இப்ராஹிம் அலி மீது குற்றப்பதிவு வழக்கு இல்லை எனவும் அவர் தமது இஸ்லாமிய மதத்தின் புனிதத்தன்மையைத்தான் தற்காத்துப் பேசினார் என்றும் எழுத்து வழி தெரிவித்தார் பிரதமர் அலுவலக சட்டத்துறைக்கான அமைச்சர்.

வேதாகமத்தை எரிப்பது என்பது இஸ்லாமிய மதத்தின் புனிதத்தன்மையை தற்காக்கும் ஒரு செயல்தான் எனும் கூற்றானது கிறிஸ்தவ ஃபெடரேஷன் ஆப் மலேசியா (சி.எஃப்.எம்) ஸ்தாபனத்தை கிறிஸ்தவர்களின் சார்பில் கொதிப்படையச்செய்துள்ளது.

இவ்விதமான நிலைப்பாடு, பொறுப்பற்றதாகவும் இஸ்லாம் அல்லாத மற்ற எந்த மதத்தைச் சார்ந்தவர்களையும் இதே விதமாய் நடத்துவதற்கு மதத் தீவிரவாதிகளுக்கு முழு சுதந்திரத்தைத் தருவதாக அமையும் எனவும் சி.எப்.எம் கருதுகிறது.

இன்னொரு மலேசிய குடிமகனின் புனித வேதத்தை அவமதிக்கும் மிரட்டல் கொண்ட அராஜக செயலானது தற்காப்புக்காகத்தான் என வாதிடுவதை எந்த விதத்திலும் எவ்வித சூழ்நிலையிலும் நியாயமாய் சிந்திக்கிற எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

அரசாங்கத்தால் பறைசாற்றப்பட்ட அப்பட்டமான சாக்குபோக்கு நிலைப்பாட்டை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். எனவே இவ்வித பொறுப்பற்ற கூற்றை அறிவித்த அமைச்சரின் மீது கடும் கண்டனத்தை தெரிவிக்க இன, மத, அரசியல் கட்சி பின்னணி பேதமின்றி நடுநிலை சிந்தனையோடு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றிணையும்படி அழைக்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள,

அருட்திரு டாக்டர் இயூ ஹோங் செங்,
தலைமை நிர்வாக செயற்குழுத்தலைவர்
சி.எஃப்.எம்